**செ. கு. எண்**: 14 **நாள்**: 08.01.2012

# மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

## அறிக்கை – 8.1.2012

கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறையில் இயங்கி வரும் கூட்டுறவு நகர வளர்ச்சி வங்கியில் காவலாளியாக பணி புரிந்து வந்த திரு. N.ராஜேந்திரன் 7.1.2012 அன்று காட்டு யானை தாக்கியதில், பலத்த காயமடைந்து மருத்துமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி காலமானார் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இவ்விபத்தில் அகால மரணமடைந்த ராஜேந்திரனின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், இத்துயரச் சம்பவத்தில் காலமான ராஜேந்திரனை இழந்து வாடும் அவர்தம் குடும்பத்திற்கு வனத் துறை மூலம் மூன்று லட்சம் ரூபாய் உடனடியாக வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**